IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.1527/2025

Deposition of Witness PW1

Name : சங்கமேஷ்வரன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் பவானியில் வசித்து வந்து ARC மருத்துவமனையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 14.10.2025 அன்று கொல்லம் பாளையத்தில் லூலு பைனான்ஸில் அடமானம் வைத்திருந்த ஒரு பவுன் நகையை திருப்பி விட்டு எனது இருசக்கர வாகனத்தில், வாகனத்தின் டிக்கியில் வைத்துவிட்டு நானும் எனது மனைவியும் துணி எடுப்பதற்காக கனி மார்க்கெட் பார்க்கிங் பகுதியில் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு சென்று விட்டோம். மதியம் 1–1.30 மணியளவில் திரும்பி வந்து வாகனத்தின் டிக்கியை திறந்து பார்த்தபோது அதில் நகை இல்லை. பிறகு நான் அருகில் தேடிப் பார்த்தேன் தெரிந்தவர்களிடமும் கேட்டேன்.

யாரும் தெரியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அதனால் எனது மனைவி அழுது அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம். அதன்பிறகு வீட்டில் இருந்தவர்களிடம் நகை

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.02.09 16:20:33 +0530

காணாமல் போன விவரம் தெரிவித்தும், பிறகு நான் வேலை காரணமாக திருவண்ணாமலை சென்று விட்டதாலும், எனது உறவினர்கள் நகை காணாமல் போனது குறித்து புகார் கொடுக்க சொன்னதால் 03.11.2025 அன்று காலை ஈரோடு டவுன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **புகார் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் பிறகு அன்றைய தினம் மாலை 5 மணி அளவில் போலீசார் அழைத்து எனது நகையை கண்டுபிடித்து விட்டதாக சொன்னதன் பேரில் நான் காவல் நிலையம் சென்று எனது நகையை அடையாளம் காட்டினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை தான் எனது காணாமல் போன நகையாகும். நான் எனது நகையை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொண்டேன். **நகையின் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை**

**மறுவிசாரணை இல்லை**.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.09 16:20:44 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.1527/2025

Deposition of Witness PW2

Name : பிரவீன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு கருங்கல்பாளையத்தில் வசித்து வந்து நெட்வொர்க் சென்டரில் பணிபுரிந்து வருகிறேன். 03.11.2025 அன்று நானும் எனது நண்பர் தனுஷ் என்பவரும் புதிதாக கட்டப்பட்டிருக்கும் கனி மார்க்கெட் வளாகத்திற்கு துணி எடுப்பதற்காக சென்றிருந்தோம். இப்போது அங்கு காலை 9 மணி அளவில் அங்கு இருந்த உதவி ஆய்வாளர் அந்தப் பகுதியில் திருட்டு நடந்திருப்பதாகவும் அது சம்பந்தமாக படம் வரைவதாகவும் அதற்கு எங்களை சாட்சியாகவும் இருக்க சொல்லி கேட்டுக்கொண்டு எங்கள் முன்னிலையில் படம் வரைந்து எழுதிக் கொண்டனர். அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.02.09 16:20:52 +0530

சரிதான். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்த நபரின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான் அதை தயாரித்தவர் உதவி ஆய்வாளர். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியில்ல தெரியும். போலீசார் கேட்டுக் கொண்டதின் பெயரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடமானது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி மற்றும் கடைகள் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் வழக்கு விவரங்கள் சரிவர தெரியாமல் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.09 16:20:57 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.1527/2025

Deposition of Witness PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : அஜய் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு கருங்கல்பாளையத்தில் வசித்து வந்து ஸ்டிக்கர் கடை வைத்து நடத்தி வருகிறேன். 03.11.2025 அன்று சென்னை சில்க்ஸ் துணி எடுப்பதற்காக நானும் எனது நண்பர் சந்தோஷ் என்பவரும் கிருஷ்ணா தியேட்டர் அருகே நடந்து சென்று கொண்டிருந்தோம். அங்கு மலபார் கடை முன்பு கூட்டமாக இருந்தது. நாங்கள் என்னவென்று சென்று பார்த்த போது அங்கு போலீசார் ஒரு நபரை TVS Sports சிவப்பு கலர் வண்டியை நிறுத்தி அந்த நபரை சோதனை செய்து கொண்டிருந்தனர். ஆஜர் எதிரி தான் அன்றைய தினம் போலீசார் சோதனை செய்த நபர் ஆவார். அப்போது ஆஜர் எதிரி போலீசாரிடம் ஸ்கூட்டியிலிருந்து தோடினை எடுத்து அவரது வண்டியின் கவரில் வைத்திருப்பதாக கூறினார். அவர் சொன்ன விவரத்தை போலீசார் பதிவு செய்து கொண்டனர்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.09 16:21:03 +0530

தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி வண்டியின் கவரில் இருந்து நகையை எடுத்து ஆஜர் செய்ததை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய கோரியதன் அடிப்படையில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

அன்றைய தினம் எங்களது முன்னிலையில் ஆஜர் எதிரியின் இருசக்கர வாகனமான TN 86 7990 சிவப்பு கலர் டிவிஎஸ் ஸ்போர்ட்ஸ் வாகனத்தையும் போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். **தற்போது என்னிடம் காட்டப்படும் மேற்ச்சொன்ன இருசக்கர வாகனமானது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.02.09 16:21:11 +0530